# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## மோட்டார் வாகனம்
## (திருத்தம்)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்களால் 2017, செத்தெம்பர் மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, ஓகத்து மாதம் 21 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **203 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 26.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

2-PL 005429-475 (2017/09)

### சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2:** இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதுடன், இத்திருத்தத்தின் சட்டப்பயனானது, "சாரதி சீர்ப்படுத்தற் புள்ளிகள்", "பிணியாளர் வண்டி" மற்றும் "கிரமமான சாரதி உரிமம்" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "பாதகமான புள்ளிகள்", "அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்" மற்றும் "சாரதி உரிமம்" என்னும் சொற்களை இடுவதாகும்.

**வாசகம் 3:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5(2) ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு மோட்டார் மனையையும் நான்கு சில்லுவண்டியையும் பதிவுசெய்வதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

**வாசகம் 4:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அபாயகரமான பண்டங்களை இடம்பெயர்த்தலினது நோக்கெல்லையை மேலும் ஒழுங்குபடுத்துவதுமாகும் என்பதுடன், 12 ஆம் வாசகத்துக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 5:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஐஎஸ்ஓ நியமங்கள் உள்நாட்டுத் தேவைப்பாடுகளை உள்ளடக்குவதற்கு ஏற்பாடுசெய்வதும் மோட்டார்மனை மற்றும் நான்கு சில்லுவண்டியை உள்ளடக்கும் வகையில் சாரதி உரிமத்தின் வகுப்பாக்கத்தை நீடிப்பதுமாகும்.

**வாசகம் 6:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மோட்டார் வாகனங்களுக்காக வழங்கப்பட்ட சாரதி உரிமங்களை அல்லது அனுமதிப்பத்திரங்களைத் தெளிவாக வகுதிப்படுத்துவதாகும்.

**வாசகம் 7:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, உடற்றகுதிக்கு மேலதிகமாக உளவிழிப்புக்காக ஏற்பாடுசெய்வதற்கும் சாரதி உரிமங்களின் வழங்குகையைக் கூடுதல் சிறந்தமுறையில் ஒழுங்குபடுத்துவதற்கும் மருத்துவப் பரிசோதனையின் நோக்கெல்லையை விசாலிப்பதாகும்.

**வாசகம் 8:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வாசகம் 5 இல் சாரதி உரிமங்களை வகுப்பாக்கம் செய்வதற்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 9:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வாசகம் 5 இல் சாரதி உரிமங்களை வகுப்பாக்கம் செய்வதற்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 10:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 126ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வாசகம் 5 இல் சாரதி உரிமங்களை வகுப்பாக்கம் செய்வதற்கு செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 11:** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 128அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அவசரகாலச் சேவை வாகனத்தை அல்லது பொதுச்சேவை வாகனங்களை ஓட்டுவதற்கு உரிமம் வைத்திருப்பவருக்கு அதிகாரமளிப்பதாகும்.

***வாசகம் 12***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 128இ என்னும் புதிய பிரிவை உட்புகுத்து கின்றது. புதிய பிரிவானது, இரசாயனப் பொருட்கள், ஆபத்தான கழிவுப்பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள், வாயு அல்லது வேறு அபாயகரமான பண்டங்களுடனான ஒரு மோட்டார் வாகனத்தை ஓட்டுவதற்கான உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதாகும்.

***வாசகம் 13***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 133அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, தரவுத்தளத்தின்மூலம் பாதகமான புள்ளிகளைப் பதிவதற்கான வினைத்திறனான நடைமுறையை ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 14***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 133ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது. புதிய பிரிவானது, இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தவறுகளுக்கான தண்டத்தை விதிக்கும்போது பாதகமான புள்ளிகளை உள்ளடக்குவதற்காக ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 15***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 139ஆஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வாசகம் 5இல் சாரதி உரிமங்களை வகுப்பாக்கம் செய்வதற்கு செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 16***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வேக வரையறைகளுக்கான மாற்றங்களை ஒழுங்குபடுத்துவதற்குக் கூடுதல் வசதியானமுறையில் ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 17***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 157அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஆசனப்பட்டிகளைப் பயன்படுத்துதல் தொடர்பான ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாளுக்கு உடனடிக் குற்றப்பணமொன்றை விதிப்பதனை இயலச் செய்வதாகும்.

***வாசகம் 18***: இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தின் மூலம் விபத்தொன்றை அறிக்கையிடுவதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 19***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 215அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இலத்திரனியற் கொடுப்பனவு வழிவகைகளை உட்படுத்துவதன்மூலம் உடனடிக் குற்றப்பணங்களின் கொடுப்பனவைச் செய்வதனை வசதியான தாக்குவதும் வினைத்திறனானதாக்குவதும் ஒழுங்குவிதிகள்மூலம் உடனடிக் குற்றப்பணங்களை விதிப்பதற்கு ஏற்பாடுசெய்வதுமாகும்.

***வாசகம் 20***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஏனைய தவறுகளுக்கான பொதுதண்டத்தை அதிகரிப்பதுமாகும்.

***வாசகம் 21***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "மரணம்", "பாதகமான புள்ளி", "இலத்திரனியல்", "அவசரகால சேவை வாகனம்", "மோட்டார் மனை", "நான்கு சில்லுவண்டி", "விசேட நோக்க வாகனம்", ''வாகனம்'' மற்றும் ''அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்'' என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதாகும்.

***வாசகம் 22***: இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பிரிவுகள், 23, 24, 24அ, 99, 128அ, 130, 135, 139அ, 141, 144அ, 152அ, 155அ, 157அ, 160, 164, 179, 188, 199 மற்றும் 196 என்பன தொடர்பில் உடனடிக் குற்றப்பணங்களை விதித்துரைப்பதற்கு அமைச்சரை இயலச்செய்வதாகும்.

# மோட்டார் வாகனம்
# (திருத்தம்)

ச.வ.- ஓ. 4/2012

## (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

***1.*** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துதல்.

***2.*** (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "சாரதி சீர்ப்படுத்தற்புள்ளிகள்" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, "பாதகமான புள்ளிகள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) "பிணியாளர் வண்டி" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

2-PL 005429-475 (2017/08)

(3) ''கிரமமான சாரதி உரிமம்'' என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக "சாரதி உரிமம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 (2) ஆம் பிரிவு, பந்தி (அ) வில், "மோட்டார் கார், இருநோக்க வாகனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மோட்டார் கார், மோட்டார் மனை, நான்குசில்லு வண்டி, இருநோக்க வண்டி" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு, (2) ஆம் உட்பிரிவிலுள்ள (த) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(த) இரசாயனப்பொருட்கள், ஆபத்தான கழிவுப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள், வாயு அல்லது வேறு அபாயகரமான பண்டங்களை கொண்டு செல்லுதலை ஒழுங்குபடுத்துதல்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு, இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

" (1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இதன் கண்ணுள்ள ஐ.எஸ்.ஓ நியம இல. ஐ.எஸ்.ஓ /ரீஈசீ /எவ்.டி.ஐ.எஸ் - 18013-1-2005 (உ) என்பதில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு நிரைகள் 1,2,3 மற்றும் 5 என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதான மோட்டார் வாகனத்தை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உள்நாட்டு தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்றதும் ஐஎஸ்ஓ நியமத்தில் வரைவிலக்கணம் கூறப்

பட்டவாறானதும் நிரைகள் 1,2,3,4 மற்றும் 5 என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட வகுப்பினதுமான மோட்டார் வாகனத்தை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்";

(2) அப்பிரிவுக்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையை இடுவதன் மூலமும்:-

"அட்டவணை

**மோட்டார் வாகனங்களுக்கான சாரதி உரிமங்களை வகுப்பாக்கம் செய்தல்**

| | நிரை 1 | நிரை 2 | நிரை 3 | நிரை 4 | நிரை 5 |
|---|---|---|---|---|---|
| | விவரணம் | புதிய வகுப்புகள் | தற்போதைய வகுப்புகள் | ஏனைய வகுப்புகளின் செல்லுபடியாந்தன்மை | முன்னைய வகுப்புகள் |
| 1. | (i) என்ஜின் ஆற்றல் 99 சீசீக்கு மேற்பட இருக்குமிடத்து மோட்டார் சைக்கிள்கள். | | ஏ | ஏ 1, ஜீ 1 | டி |
| | (ii) என்ஜின் ஆற்றல் 100 சீசீக்கு குறைவாக இருக்குமிடத்து மோட்டார் சைக்கிள்கள். | | ஏ 1 | ஜீ 1 | டி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | (i) சாரதியின் ஆசனம் உட்பட ஒன்பது ஆசனங்களை விஞ்சாத ஆசனக் கொள்ளளவுடையனவும் 4500 கிலோ கிராம்களுக்குக் குறைவான அதிகபட்ச அதிகாரமளிக்கப்பட்ட வெற்று எடையைக் கொண்டனவுமான மோட்டார் வாகனங்கள்; இவ்வகுப்பினதான மோட்டார் வாகனங்கள், 750 கிலோ கிராம்களுக்குக் குறைவான வெற்று எடையைக் கொண்ட இழுவை வண்டியுடன் | | பீ | ஜீ1, பீ2 | சீ, சீ1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இணைக்கப்படலாம் என்பதுடன், அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் உள்ளடக்குதலும் வேண்டும். | | | | |
| | (ii) இருநோக்க வாகனம்- இவ்வகுப்பினதான மோட்டார் வாகனங்கள் 750 கிலோகிராம்களுக்குக் குறைவான அதிகாரமளிக்கப்பட்ட வெற்று எடையைக் கொண்ட இழுவை வண்டியுடன் இணைக்கப்படலாம் என்பதுடன், அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் உள்ளடக்குதலும் வேண்டும். | | பீ | ஜீ1, பீ2 | சீ, சீ1 |
| | (iii) மோட்டார் மனை | பீ | பீ | ஜீ1, பீ 2 | |
| 3. | (i) மோட்டார் முச்சக்கர வண்டி | | பீ1 | ஜீ1 | ஈ, எப் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | அல்லது மோட்டார் முச்சக்கர வான்– அதிகாரமளிக்கப்பட்ட வெற்று எடை 500 கிலோ கிராம்களுக்குக் குறைவாகவும் முழு மொத்த வாகன எடை 1000 கிலோ கிராம்களுக்குக் குறைவாகவும் இருக்குமிடத்து; அத்துடன் அங்கவீன முற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனத்தையும் உள்ளடக்குதலும் வேண்டும். | | | | |
| | | (ii) நான்கு சில்லு வண்டி | பீ2 | | ஜீ1 | |
| 4. | | (i) மோட்டார் லொறி | | சீ | சீ1, பீ, பீ1, பீ2, ஜீ, ஜீ1,ஜே | பீ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (ii) பாரமற்ற மோட்டார் லொறி | | *சீ1* | *பீ,பீ1,பீ2, ஜீ, ஜீ1,ஜே* | *பீ* |
| 5. | *பாரமான மோட்டார் லொறி.* | | *சீஈ* | *சீ,சீ1 பீ, பீ1, பீ2, ஜீ, ஜீ1, ஜே* | *பீ* |
| 6. | (i) மோட்டார் கோச்சு | | *டி* | *டி1,சீ, சீ1 பீ, பீ1, பீ2, ஜீ, ஜீ1, ஜே* | *ஏ* |
| | (ii) பாரமற்ற மோட்டார் கோச்சு | | *டி1* | *சீ1 பீ, பீ1, பீ2,ஜீ, ஜீ1,* | *ஏ1* |
| 7. | *பாரமான மோட்டார் கோச்சு* | | *டிஈ* | *டி,டி1,சீஈ, சீ, சீ1 பீ, பீ1, பீ2, ஜீ, ஜீ1, ஜே* | *ஏ* |
| 8. | *இழுவண்டியுடன் அல்லது அதுவன்றி நில வாகனம்* | | *ஜீ* | *ஜீ1* | |
| 9. | *கை உழவுயந்திரம்.* | | *ஜீ1* | | |
| 10. | *விசேட நோக்க வாகனம்.* | | *ஜே* | *பி, ஜீ, ஜீ 1* | *பீ, ஜீ* |
| 11. | *அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப் பட்ட வாகனம்* | *எச்* | | | |

.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122அ என்னும் பிரிவு, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"சாரதி உரிமங்களின் வகுதிகள்.

122அ. (1) மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் அல்லது உரிமங்களின் வகுதிகள் பின்வருமாறாதல் வேண்டும் :-

(i) பழகுநர் அனுமதிப்பத்திரம்;

(ii) பாரமற்ற மோட்டார் வாகனங்களுக்கான சாரதி உரிமம்; அல்லது

(iii) பாரமான மோட்டார் வாகனங்களுக்கான சாரதி உரிமம்.

(2) இப்பாகத்தின் நோக்கங்களுக்காக -

(அ) பாரமற்ற மோட்டார் வாகனம், 122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் விடயம் 1(i), 1(ii), 2(i), 2(ii), 2(iii), 3(i), 3(ii), 8, 9 அல்லது 11 இல் குறித்துரைக்கப்பட்ட வாகனங்களின் வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பாரமான மோட்டார் வாகனங்கள், 122ஆம் பிரிவுக்கான அட்டவணையின் விடயம் 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7 அல்லது 10 இல் குறித்துரைக்கப்பட்ட வாகனங்களின் வகுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 124 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "விண்ணப்பகாரர் உடல்ரீதியாகத் தகுதியுள்ளவரென்பதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விண்ணப்பகாரர் உடல் ரீதியாகத் தகுதியுள்ள வரென்பதையும் உளரீதியாக விழிப்புடையவரென்பதை யும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு களை இடுவதன் மூலமும்:-

"(2) நூற்றியிருபத்திரெண்டாம் பிரிவுக்கான அட்டவணையின் விடயம் 1(i), 1(ii), 2(i), 2(ii), 2(iii), 3(i), 3(ii), 8, 9 அல்லது 11 இல் குறித்துரைக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங்களுக்குச் செல்லுபடியாகவுள்ள சாரதி உரிமத்துக்கான விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும், தாம் –

(அ) பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்துள் ளாரென்றும்;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியிட மிருந்து பழகுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கேனும், விண்ணப்பமானது எந்த வகுப்பினதான வாகனங்கள் தொடர்பில் செய்யப்பட் டதோ அந்த வகுப்பினதான வாகனங் களின் சாரதி பழகுநராக இருந்துள்ளா ரென்றும்;

(இ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய கல்வி மற்றும் ஏனைய தகைமைகளைக் கொண் டிருக்கின்றாரென்றும்,

ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பித்தல் வேண்டும்.

(3) பாரமான மோட்டார் வாகனங்களுக்கான சாரதி உரிமத் துக்கான ஒவ்வொரு விண்ணப்பகாரரும், தாம் –

(அ) இருபத்தொரு வயதைப் பூர்த்தி செய்துள்ளா ரென்றும்;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பழகுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கேனும், விண்ணப்பமானது எந்த வகுப்பினதான வாகனங்கள் தொடர்பில் செய்யப்பட்டதோ அந்த வகுப்பினதான வாக னங்களின் சாரதி பழகுநராக இருந்துள்ளா ரென்றும்;

(இ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறு, மோட்டார் வாகனங்களின் பொறி முறை பற்றிப் போதிய செயல்முறை அறிவைக் கொண்டுள்ளாரென்றும்;

(ஈ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறு, அத்தகைய கல்விசார் மற்றும் வேறு தகைமைகளைக் கொண்டுள்ளாரென்றும்;

(உ) இரண்டாண்டுகளுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு, 122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் விடயம் 2(i), 2(ii), 2(iii), 3(i),

*3*(ii) அல்லது *8* இல் குறித்துரைக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங் களுக்குச் செல்லுபடியான சாரதி உரிமமொன் றைக் கொண்டிருந்தாரென்றும்,

ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண் பித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் *125* ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(5) (அ) (i) பதினெட்டு வயதை அடைந்திராத எவரேனு மாளுக்கு *122* ஆம் பிரிவுக்கான அட்டவணை யின் விடயம் *1*(i), *1*(ii), *2*(i), *2*(ii), *2*(iii), *3*(i), *3*(ii), *8*, *9* அல்லது *11* இல் குறித்துரைக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பில்; அத்துடன்

(ii) இருபத்தொரு வயதை அடைந்திராத எவரேனு மாளுக்கு *122* ஆம் பிரிவுக்கான அட்ட வணையின் விடயம் *4*(i), *4*(ii), 5, *6*(i), *6*(ii), 7 அல்லது *10* இல் குறித்துரைக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மோட்டார் வாகனங்கள் தொடர்பில்,

சாரதி உரிமமெதுவும் வழங்கப்படுதலாகாது.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொ ருவருக்கு வழங்கப்பட்ட சாரதி உரிமம் சட்ட வலுவோ அல்லது பயனோ கொண்டிருத்தலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், “அட்டவணையின் 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7, 9 மற்றும் 10 ஆம் விடயங்களில்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ’அட்டவணையின் 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7 மற்றும் 10 ஆம் விடயங்களில்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், “122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் 1(i), 1(ii),2, 3 மற்றும் 8 ஆம் விடயங்களில்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2(i), 2(ii), 2(iii), 3(i), 3(ii), 8, 9 அல்லது 11 ஆம் விடயங்களில்’ என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆ எனும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

*“சாரதி உரிமமொன்றைப் புதுப்பித்தல்.*

126ஆ. (1) நூற்றியிருபத்தாறாம் பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளினதும் மற்றும் 126 அ என்னும் பிரிவினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு சாரதி உரிமமும், அது எக்காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அக்காலப்பகுதி முடிவுறுவதன் மீது, 122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2(i), 2(ii), 2(iii), 3(i),

3(ii), 8, 9 அல்லது 11 ஆம் விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பினதான மோட்டார் வாகனங்களின் விடயத்தில், ஒரு தடவையில், ஒவ்வொன்றும் எட்டாண்டுகளுக்கான மேலதிகக் காலப்பகுதிக்காகவும், அத்தகைய அட்டவணையின் 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7 அல்லது 10 ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பினதான மோட்டார் வாகனங்களின் விடயத்தில், ஒரு தடவையில், ஒவ்வொன்றும் நான்காண்டுகளுக்கான மேலதிக காலப்பகுதிகளுக்காகவும் புதுப்பிக்கப்படலாம்.

(2) சாரதி உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் -

(அ) விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்;

(ஆ) விதித்துரைக்கப்பட்ட கட்டணக் கொடுப்பனவு செய்யப்பட்டதன் மீதானதாதல் வேண்டும்;

(இ) 124 ஆம் பிரிவின் (1) (அ) என்னும் உட்பிரிவுக்கிணங்க வழங்கப்பட்ட மருத்துவச் சான்றிதழொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(3) சாரதி உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அத்தகைய உரிமம் முடிவுறுவதற்கு ஆகக்குறைந்தது மூன்றுமாதங்களுக்கு முன்னரேனும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 அ என்னும் பிரிவு, (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

> "(3) விடயத்துக்கேற்ப, அவசரகாலச் சேவை வாகனத்தை அல்லது பொதுச் சேவை வாகனத்தை ஓட்டுவதற்கு உரிமம் வைத்திருப்பவரொருவருக்கு அதிகாரமளிக்கின்றதும் சாரதி உரிமமொன்றின் மீதானதுமான புறக்குறிப்பொன்றுக்காகத் தகைமை பெறுவதற்கு அவசியமான தேவைப்பாடுகளையும், தகைமைகளையும் மற்றும் பரீட்சிப்புகளையும் அமைச்சர் ஒழுங்குவிதிகளின் மூலம் விதித்துரைக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 128 இ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப் படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 128 இ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"இரசாயனப் பொருட்கள் அல்லது ஆபத்தான கழிவுப் பொருட்கள் முதலியனவற்றை ஏற்றிச் செல்கின்ற மோட்டார் வாகனத்தை ஓட்டுதல்.

128இ. (1) இரசாயனப்பொருட்கள், ஆபத்தான கழிவுப்பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், வாயு அல்லது வேறு அபாயகரமான பண்டங்களுடனான மோட்டார் வாகனமொன்றை ஓட்டிச்செல்வதற்கு உட்கருதுகின்ற ஆளொருவர், ஏற்புடையற்பாலதாகக்கூடியவாறாக, 122 ஆம் பிரிவுக்கான அட்டவணையின் 2(ii), 4(i), 4(ii) அல்லது 5 இல் குறிப்பீடு செய்யப்பட்ட வகுப்பிலானதொரு சாரதி உரிமத்துக்காக, விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றை ஓட்டு

வதற்கு தகுதியுடையவரா என்பதனைத் தீர்மானிப்பதற்கு அவசியமான தகைமைகளையும் நடாத்தப்பட வேண்டிய பரீட்சிப்புகளையும் அமைச்சர் ஒழுங்கு விதி மூலம் விதித்துரைக்கலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 அ என்னும் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் உட்பிரிவுகள் (1) மற்றும் (1அ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:-

“(1) அமைச்சர் ஒழுங்குவிதிகளின்மூலம் பின்வருவனவற்றை விதித்துரைக்கலாம்-

(அ) தவறுகளுக்காக விதிக்கப்படவேண்டிய பாதகமான புள்ளிகள்; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறுகளுக்கான இயைபான பாதகமான புள்ளிகள்,

(1அ) (அ) (i) சாரதி உரிமத்தை வைத்திருப்பவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்தும், அத்தகைய தவறு சாரதி உரிமத்தை இடை நிறுத்துவதாக அல்லது இல்லாதாக்குவதாக அமையாதவிடத்தும், அத்தகைய தவறுக்கான இயைபான பாதகமான புள்ளிகளை அத்தகைய நோக்கத்திற்காக தாபிக்கப்பட்ட தரவுத் தளத்தில் பதிவதற்கு நீதிமன்றம் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியைப் பணிக்கலாம்;

(ii) சாரதி உரிமத்தை வைத்திருப்பவர் பிரிவு 215 அ வின் கீழ் விதித்துரைக்கப்பட்ட உடனடியான

குற்றப்பணமொன்றுக்கான பொறுப்புடைமையை ஏற்குமிடத்து பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அத்தகைய தவறுக்கான இயைபான பாதகமான புள்ளிகளை அத்தகைய நோக்கத்திற்காகத் தாபிக்கப் பட்ட தரவுத்தளத்தில் பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஒவ்வொரு மாகாணத்துக்குமான அதிகார இடங்களுக்குப் பொறுப் பான பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி சார்ஜண்ட் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலான அலுவலரொருவருக்கு தரவுத்தளத்தில் இயைபான பாதகமான புள்ளிகளை பதிவதற்கு அதிகாரமளிக்கலாம். பிரதி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி விடயத்திற் கேற்ப, சாரதி உரிமத்தில் அல்லது புறக்குறிப்புப் படிவத் தில் விதித்துரைக்கப்பட்ட முறையில் பாதகமான புள்ளி களை பதிவுசெய்கின்றவாரான ஆணையாளர் தலைமை யதிபதிக்கு பாதகமான புள்ளிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.

(இ) இப்பரிவில், "மாகாணம்" என்பது அரசியலமைப் பின் உறுப்புரை 154 அ என்பதன் பயனைக்கொண்டு மாகாணமொன்றுக்கு தாபிக்கப்பட்ட மாகாணசபை என்று பொருளாகும்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடு வதன் மூலமும்.

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிடு வதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 133 ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 133அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 133 ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்கான தண்டத்தை விதிக்கும்போது பாதகமான புள்ளிகள் உள்ளடக்கப் படுதல் வேண்டும்.

133ஆ. இச்சட்டத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவர் -

(1) ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுமிடத்து; அல்லது

(2) எத்தவறுக்காக 224 ஆம் பிரிவின்கீழ் தண்டம் குறித்துரைக்கப்படுகின்றதோ அத்தவறுக்குக் குற்றவாளியாகவுள்ளவிடத்து; அல்லது

(3) சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்றவிடத்து,

நீதிவான், குற்றத்தீர்ப்பளிப்பின்மீது, பின்வரும் தண்டங்களை விதிக்கலாம்:-

(அ) அத்தகைய தவறுக்காக இயைபான பிரிவில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான குற்றப்பணம்; அல்லது

(ஆ) அத்தகைய தவறுக்காக இயைபான பிரிவில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான மறியற்றண்டனைக் காலம்; அல்லது

(இ) 133அ என்னும் பிரிவின்கீழ் இயைபான பாதகமான புள்ளிகளைப் பதிவீடு செய்யும்படி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்குக் கட்டளையொன்றை ஆக்கலாம்; அல்லது

(ஈ) மேற்கூறப்பட்ட தண்டங்களுள் எவற்றையும் இணைக்கின்ற ஏதேனும் தண்டம்; அல்லது

(உ) மேற்கூறப்பட்ட (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின் கீழான எல்லாத் தண்டங்களும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 139 ஆஆ என்னும் பிரிவு, இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில்,''122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2, 3 மற்றும் 8 ஆம் விடயங்களில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2(i), 2(ii), 2(iii), 3(i), 3(ii), 8 மற்றும் 9 ஆம் விடயங்களில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில்,"122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2, 3, 4(i), 4(ii), 6(i), 6(ii), 8 மற்றும் 10 ஆம் விடயங்களில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2(i), 2(ii), 2(iii), 3(i), 3(ii), 4(i), 4(ii), 6(i), 6(ii), 8 மற்றும் 10 ஆம் விடயங்களில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில்,''122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2, 3, 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7, 8, 9 மற்றும் 10 ஆம் விடயங்களில்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "122 ஆம் பிரிவிற்கான அட்டவணையின் 1(i), 1(ii), 2(i), 2(ii), 2(iii), 3(i), 3(ii), 4(i), 4(ii), 5, 6(i), 6(ii), 7, 8, 9 மற்றும் 10 ஆம் விடயங்களில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 140 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*“வேக எல்லைகள்.*

140. (1) மோட்டார் வாகனமொன்று ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட வேக எல்லைகளை விட கூடுதலான வேகத்தில் செலுத்தப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அவசர நிலை நோக்கமொன்றுக்காகப் பயன்படுத்தப்படும் போது மோட்டார் நோயாளர் வண்டிக்கு, தீயெதிர்ப்புச்சமர் வாகனத்துக்கு அல்லது பின் தொடர்ந்து செல்லுகையில் பொலிசு வாகனத்துக்கு ஏற்புடையனவாதலாகாது.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 157அ என்னும் பிரிவு, அதன் (4) ஆம் உட்பிரிவில், “ஓராம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 161 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அதன் (i) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியின் (iii), (iv) மற்றும் (v) ஆம் உட்பந்திகளை நீக்கிவிடுவதன் மூலம் அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(iii) எவ்வாளுக்கு ஊறுவிளைவிக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் அவ்வாறு கோரும் ஏதேனும் விடயத்தில், அல்லது அவர் மயக்கமுற்றநிலையிலிருந்தால் அல்லது அவ்வாளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறு அவரது உயிருக்கு ஆபத்தேற்படுத்துவதாகத் தோன்றினால், அவ்வாளை உடனடியாக மருத்துவமனையொன்றுக்கு அல்லது ஒரு மருத்துவதொழிலரிடம் கொண்டுசெல்லுதல் வேண்டுமென்பதுடன், அதன்பின்னர் மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு விபரத்தை அறிக்கையிடுதலும் வேண்டும்;

(iv) உட்பந்தி (iii) இல் குறிப்பீடுசெய்யப்படாத ஒவ்வொரு விடயத்திலும், (4) ஆம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட படிவத்துக்கிணங்க மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு விபத்தை அறிக்கையிடுதல் வேண்டும்; அத்துடன்

(v) நான்காம் உட்பிரிவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்துக்கிணங்க மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அத்தகைய விபத்தை உடனடியாக அறிக்கையிடத் தவறுகின்ற சாரதியொருவர், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், மூவாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.";

(ஆ) அதன் (இ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம்:-"

"(ii) விபத்து ஏற்பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள், அவரது பெயரையும் முகவரியையும் விபத்து ஏற்பட்ட நேரத்தில் தாம் வாகனத்தில்

இருந்தாரென்ற நிகழ்வையும் (4) ஆம் உட்பிரிவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்திற்கிணங்க ஒரு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.”;

(இ) அதன் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

“(ஈ) அத்தகைய விபத்து சம்பந்தமாக எந்தக் காப்புறுதியாளருக்குக் காப்புறுதி உரிமைக் கோரிக்கையொன்று செய்யப்படுகின்றதோ அந்தக் காப்புறுதியாளர் -

(i) விபத்துக்கள் தொடர்பான புள்ளிவிபரப் பதிவேடுகளைத் தொகுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய விபத்துத் தொடர்பான விபரங்களையும் உரிமைக்கோரிக்கையைச் செய்கின்ற ஆளினால் அவருக்கு அறிவிக்கப்பட்டவாறு அத்தகைய விபத்தில் சம்பந்தப்பட்ட திறத்தவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் கொடுத்து, அத்தகைய விபத்து பற்றி மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ii) மிகக்கிட்டிய பொலிசு நிலையத்தின் பொலிசு அலுவலரினால் சான்றுப்படுத்தப்பட்ட, (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட படிவத்தின் பிரதியொன்று கொடுத்துதவப்படும்வரை ஏதேனும், உரிமைக்கோரிக்கையைக் கொடுத்துத் தீர்த்தல்;”;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் (4) ஆம் உட்பிரிவாகப் பயனுறவேண்டிய பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம்:-

“(4) அமைச்சர் -

(அ) மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்கு விபத்தொன்றை அறிக்கையிடும்போது பின்பற்ற

வேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்துரைக்கின்றவையும்;

(ஆ) விபத்தை அறிக்கையிடுவதற்கான படிவத்தைக் குறித்துரைக்கின்றவையும்; அத்துடன்

(இ) இப்பிரிவு சம்பந்தமாக அவசியமாகவிருக்கக்கூடிய வாறான வேறேதேனும் தகவலைக் குறித்துரைக்கின்றவையும்,

ஆன ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 215அ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**19**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 215அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"உடனடியான குற்றப் பணங்கள்.

215அ. (1) இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள ஏதேனும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பிரிவின்கீழ் சட்டமுறையாக வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்கு, பணிப்புக்கு, கோரிக்கைக்கு தேவைப்பாட்டுக்கு அல்லது அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றை பொலிசு அலுவலரொருவர் கண்டுபிடிப்பு செய்யுமிடத்தும் சம்பந்தப்பட்ட ஆள் அத்தகைய தவறுக்கான பொறுப்பை ஒப்புக்கொள்கின்றவிடத்தும் அத்தகைய ஆள் ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான உடனடியான குற்றப்பணத்தை அத்தகைய தவறுக்கான குற்றவழக்கிற்கு பதிலாக செலுத்தலாம்.

(3) பாதகமான புள்ளிகளுக்கமைந்தனவாக தவறொன்றுக்கான பொறுப்புடைமை ஒப்புக் கொள்ளப்படுமிடத்து, இயைபான பாதகமான புள்ளிகள் பிரிவு 133அ வின் கீழ் அத்தகைய தவறுக்காக பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(4) குற்றப்பணத்தின் கொடுப்பனவு, ஒன்றில் -

(i) ஏதேனும் அஞ்சலலுவலகத்துக்கு; அல்லது

(ii) விதித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் அரசாங்க நிறுவனத்துக்கு; அல்லது

(iii) விதித்துரைக்கப்படக்கூடியவாறாக இலத்திரனியல் வழிவகைகள் மூலம்,

செய்யப்படுதல் வேண்டும்.

(5) அத்தகைய கொடுப்பனவுக்கான எண்பிப்பு, கண்டுபிடிப்புத் தேதியிலிருந்து இருவார காலப்பகுதியினுள், கண்டுபிடிப்பைச் செய்கின்ற பொலிசு அலுவலரினால் பெயர்குறிப்பிடப்பட்ட பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு, ஒன்றில் நேரடியாக ஒப்படைப்பதன் மூலம் அல்லது பதிவஞ்சல்மூலம் அல்லது விதித் துரைக்கப்படக்கூடியவாறான இலத்திரனியல் வழிவகைகள்மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் குற்றப்பணத்தைச் செலுத்தத் தவறுகின்றவரான எவரேனும் ஆள், நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படுமுன்னர், (5) ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடுசெய்யப்பட்ட காலப்பகுதியை உடனடுத்துப்பின்னர் இரண்டு

வாரக் காலப்பகுதியினுள் அத்தகைய தவறுக்காக விதித்துரைக்கப்பட்ட குற்றப்பணத்தொகையின் இருமடங்கைச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படலாம்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 224 ஆம் பிரிவு, "இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களிலிருந்து தொடங்குகின்றவையும் அப்பிரிவின் முடிவுவரையுள்ளவையுமான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு குறையாததும் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கும் இரண்டாவது குற்றத்தீர்ப்பளிப்பின்மேல் மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கும் மூன்றாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பளிப்பின் மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணத்துக்கும் ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 240 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) " "மரணம்" என்பதன் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

" "மரணம்" என்பது, விபத்தின் விளைவாக உடனடியாக அல்லது அதனை அடுத்துப்பின்னர் கொல்லப்பட்ட ஆளொருவர் என்று பொருளாகும்;

''பாதகமான புள்ளிகள்'' என்பது, தவறாளரின் சாரதி உரிமத்தில் பதியப்பட்ட வேறெவையேனும் தண்டங்களுடன் சேர்த்து மேலதிகமாக மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் வாகனத் தவறுகளுக்காகக் குறித்தளிக்கப்பட்ட புள்ளிகள் என்று பொருளாகும்;";

(2) "இருநோக்க வாகனம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரை விலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

" "இலத்திரனியல்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;";

(3) "அவசரகாலச் சேவை வாகனம்" எனும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், பந்தி (அ) வினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம்:-

"(அ) அவசர அழைப்புக்காகப் பயன்படுத்தப்படும் மற்றும் பின்வரும் விடயத்தில் அடையாளங் காணப்படும் வாகனமொன்று:-

(i) சிவப்பு விளக்கு பயன்படுத்துவதன் மூலம் தீயணைப்பு சேவைத் திணைக் களத்தினால் பயன்படுத்தப்படும் தீயணைப்பு வாகனம்;

(ii) சிவப்பு விளக்கு மற்றும் நீலவிளக் கினைப் பயன்படுத்துவதன் மூலம் பொலிசாரினால் பயன்படுத்தப்படும் வாகனமொன்று; அத்துடன்

(iii) சிவப்பு விளக்கினைப் பயன்படுத்து வதன்மூலமான நோயாளர் வண்டி யொன்று; அத்துடன்";

(4) "பிணியாளர் வண்டி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிடுவதன்மூலம்;

(5) "மோட்டார் சைக்கிள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரை விலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "மோட்டார்மனை" என்பது, பயணிகளை இடம் பெயர்ப்பதற்காகவும் கொண்டுசெல்வதற் காகவும் இழுவைவண்டியில்லாமல் வடி வமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஒரு வாகனம் என்று பொருளாகும்; ஆயின், (சாரதியுட்பட) ஏற்றிச்செல்லப்படும் பயணி களின் எண்ணிக்கை ஆறை விஞ்சுதலாகா தென்பதுடன், வாகனத்தின் முழுமொத்த எடை நான்காயிரத்து ஐந்நூறு கிலோகிராம்களை விஞ்சுதலுமாகாது;";

(6) "பொது நிறுத்திடம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "நான்குசில்லுவண்டி" என்பது, 500 கிலோகிராம்களுக்குக் குறைவான வெற்று எடையைக் கொண்டதுடன் 199 சீசீ மற்றும் 499சீசீ க்கிடையேயான என்ஜின் ஆற்றலைக் கொண்டதும், அல்லது மின்சார மோட்டாரின் விடயத்தில் அல்லது வலதுகைப்பக்கச் செலுத்துகையின் ஒருங்கிணைந்த மூடிய உடற்கோப்பைக் கொண்ட மின்சார வாகனங்களின் விடயத்தில் 15 கிலோ வாட்டுக்களை விஞ்சாத அதிகபட்சத் தொடர்ச்சியான மதிப்பீடுசெய்யப்பட்ட மின்வலுவைக் கொண்டதுமான ஒரு வாகனம் என்று பொருளாகும்; இவ்வகுப்பைச்சேர்ந்த மோட்டார் வாகனங்கள், சாரதியுட்பட ஐந்து ஆட்களுக்கு மேற்படாத ஆசனக் கொள்ளளவைக் கொண்டதாக ஆட்களை ஏற்றிச்செல் வதற்காக அல்லது 1000 கிலோகிராம்களின தான அதிகபட்ச முழுமொத்த வாகன எடையைக் கொண்டுள்ள பண்டங்களை ஏற்றிச்செல்வதற்காகப் பயன்படுத்தப்படுகின் றன;";

(7) “விசேட நோக்க வாகனம்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“ “விசேட நோக்க வாகனம்” என்பது, குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காக வடிவமைக்கப்பட்ட விசேட அடிச்சட்டத்தை அல்லது பாரிய திரிபுபடுத்தல்களை உள்ளடக்கி பெறு நோக்க அடிச்சட்டத்தைக் கொண்டவொரு வாகனம் என்று பொருளாகும்; இது, (குப்பைகூளப் பாரவண்டிகள், தெருப்பெருக்கிகள் முதலியவை) போன்ற பொதுப்பயன்பாட்டு வாகனங்களையும், (இடம்பெயர் பாரம்தூக்கிகள், இடம்பெயர் துளையிடும் எந்திரங்கள், இடம்பெயர் பொறித்தொகுதிகள், உறையூட்டும் பாரவண்டிகள், நெம்புகோல் உயர்த்தி, ஏற்றிகள் போன்ற) நிர்மாண வாகனங்களையும் மற்றும் கமத்தொழில் நோக்கங்களுக்காகவும் பேணுகைக்காகவும் பயன்படுத்தப்பட்ட வேறெவையேனும் விசேட வாகனத்தையும் உள்ளடக்கும்;”;

(8) ‘‘வாகனம்’’ என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணம் “புகையிரதத் தன்னாற்றலாலியங்கும் பொறியை உள்ளடக்காது.” என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘புகையிரதத் தன்னாற்றலாலியங்கும் பொறியை உள்ளடக்காது;” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது;

(9) “வாகனம்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

“ “அங்கவீனமுற்ற ஆட்களினால் பயன்படுத்தப்பட்ட வாகனம்’’ என்பது, சில உடற்குறைபாட்டினால் அல்லது அங்கவீனத்தினால் பீடிக்கப்பட்ட ஆட்களின் பயன்பாட்டுக்காக

விசேடமானமுறையில் வடிவமைக்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டதும், அல்லது இசைவாக்கப்பட்டதும், அத்தகைய ஆட்களினால் மட்டுமே பயன்படுத்தப்படுவதற்காக உட்கருதப்பட்டதுமானவொரு மோட்டார் வாகனம் என்று பொருளாகும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**22**. இராண்டாயிரத்து ஐந்தாமாண்டின் 12 ஆம் இலக்க, குற்றப்பணங்களின் அதிகரிப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் நிரை III இனை விட்டுவிடுவதன்மூலம்;

(2) அதன் நிரைகள் I மற்றும் II இனை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

**"இரண்டாம் அட்டவணை**

[பிரிவு 215 அ]

| | பிரிவு | ஏற்பாடுகள் |
|---|---|---|
| 1. | பிரிவு 21, 22, 23, 24, 24அ | அடையாளங்காணற் தகடுகள் |
| 2 | பிரிவு 38 | மோட்டார் வாகனங்களில் வெளிக்காட்டி வைக்கப்பட்டு தேவைப்படுத்தப்படும் போது காண்பிக்கவேண்டிய அரசிறை உரிமம் |
| 3. | பிரிவு 45 | அரசிறை உரிமங்களுக்கு முரணாக மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்துதல் மீதான தடை |

| | | |
|---|---|---|
| 4. | பிரிவு 99 | காப்புறுதிச்சான்றிதழின்றி வாகனமொன்றை ஓட்டுதல் அல்லதுபயன்படுத்துதலைத் தடைசெய்தல் |
| 5. | பிரிவு 123 | சாரதி அனுமதிப்பத்திரமின்றி ஓட்டுவதற்கு தடை |
| | | மோட்டார் வாகனமொன்றை ஓட்டுவதற்கு சாரதி அனுமதிப் பத்திரமின்றி ஆளொருவரை தொழிலுக்கமர்த்துதலை தடைசெய்தல் |
| 6. | பிரிவு 123. | விதிக்கப்பட்ட வயதுக்குக்கீழ் ஓட்டுவதற்கான தடை |
| 7. | பிரிவு 128அ | அவசரகாலச்சேவை வாகனங்களையும் பொதுச்சேவை வாகனங்களையும் ஓட்டுவதற்கான அதிகாரவளிப்பைப் பெற்றுக்கொள்ளத் தவறுதல் |
| 8. | பிரிவு 128 ஆ | அத்தகைய நோக்கத்திற்காக உரிமம் பெற்றுக்கொள்ளாமல் விசேட நோக்க வாகனமொன்றை ஓட்டுதல் |
| 9. | பிரிவு 128 இ | இரசாயனப்பொருட்கள், ஆபத்தான கழிவுகள் முதலியவற்றுடன் சுமை ஏற்பட்ட வாகனமொன்றை ஓட்டுவதற்கான அதிகாரம் பெற்றுக்கொள்ளத் தவறுதல். |
| 10. | பிரிவு 130 | குறிப்பிட்டவொரு வகுப்பினவான வாகனங்கள் ஓட்டுவதற்கான உரிமத்தைக் கொண்டிருக்கத் தவறுதல் |
| 11. | பிரிவு 135 | ஓட்டும்போது சாரதி உரிமத்தைக் கொண்டு செல்லத் தவறுதல் |

| | | |
|---|---|---|
| 12. | பிரிவு 139அ | அறிவுறுத்தல் உரிமமின்றி அறிவுறுத்துதல் |
| 13. | பிரிவுகள் 140, 141 மற்றும் 144 அ | வேக எல்லை ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை |
| 14. | பிரிவு 148 | வீதி விதிகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல் |
| 15. | பிரிவு 152 | ஓட்டும் போது வாகனத்தின் தடையில்லாக் கட்டுப்பாடு |
| 16. | பிரிவு 153 | ஓட்டும் போது தோதற்ற சைகைகளைப் பயன்படுத்துதல் முதலியன |
| 17. | பிரிவு 154 | வீதியொன்றில் நீண்ட தூரத்துக்கு ஒரு மோட்டார் வாகனத்தைப் பின்செலுத்துதலை தடைசெய்தல். |
| 18. | பிரிவு 155 | எச்சரிக்கைக் கருவிகளின் முறையற்ற பாவனை |
| 19. | பிரிவு 155அ | புகையின் மிதமிஞ்சிய வெளியேற்றுகை |
| 20. | பிரிவு 156 | மோட்டார் வாகனங்களின் மிதிபலகைகள் போன்றவற்றில் சவாரிசெய்தல் மற்றும் சவாரி செய்ய அனுமதித்தல் |
| 21. | பிரிவு 157 | மோட்டார் கார்களின் முற்புற ஆசனங்களிலுள்ள ஆட்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் |
| 22. | பிரிவு 157அ | ஆசனப்பட்டிகளைப் பயன்படுத்தாமை |
| 23. | பிரிவு 158 | பாதுகாப்புத் தலைக்கவசங்களை அணியத்தவறுதல் |

| | | |
|---|---|---|
| 24. | பிரிவு 159 | ஓடிக்கொண்டிருக்கும் வாகனத்திலிருந்து விளம்பரங்களை விநியோகித்தலை தடைசெய்தல். |
| 25. | பிரிவு 160 | ஒரு வாகனத்திலிருந்து மிதமிஞ்சிய சத்தம் |
| 26. | பிரிவு 162 | பொலிசு அலுவலர்கள் முதலியவர்களின் பணிப்புகளுக்கும் சைகைகளுக்கும் கீழ்ப்படியத் தவறுதல் |
| 27. | பிரிவு 164 | வாகனச் சைகைகளுக்கு இணங்கியொழுகாமை |
| 28. | பிரிவு 165 | தாங்கியினுள் எரிபொருள் நிரப்பும் போது எடுக்கப்படவேண்டிய முற்காப்புகள் |
| 29. | பிரிவு 166 | மோட்டார் வாகனங்களை வீதியில் நிறுத்தாமை அல்லது தரித்துவைக்காமை |
| 30. | பிரிவு 167 | மோட்டார் வாகனம் வீதியில் நிறுத்தப்படும் போது அல்லது கவனிப்பாரற்று விட்டுவிடப்படும் போது அல்லது பழுதடைந்துள்ள போது எடுக்கப்படவேண்டிய முற்காப்புகள் |
| 31. | பிரிவு 178 | தனியார் கோச்சுக்களில் அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு விஞ்சுதலாக ஆட்களையும் மோட்டார் கார்களில் அல்லது தனியார் கோச்சுக்களில் சொந்தப் பயணப் பொதி தவிர்ந்த பண்டங்களையும் ஏற்றிச்செல்லுதல் |

| | | |
|---|---|---|
| 32. | பிரிவு 179 | அதிகாரமளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு விஞ்சுதலான ஆட்களை அல்லது பயணிகளை மற்றும் சொந்தப் பயணப்பொதிதவிர்ந்த பண்டங்களை வசுவண்டிகளில் ஏற்றிச்செல்லுதல் |
| 33. | பிரிவு 188 | அதிகபட்ச சுமைக்கு அல்லது அதிகபட்ச அச்சுச் சுமைக்கு விஞ்சுதலான பண்டங்களை லொறியில் அல்லது மோட்டார் முச்சக்கர வானில் ஏற்றிச்செல்லுதல் |
| 34. | பிரிவு 189 | ஒரு லொறியில் ஏற்றிச்செல்லப்படும் ஆட்களின் எண்ணிக்கை விஞ்சுதலாகவிருத்தல் |
| 35. | பிரிவு 190 | ஒழுங்குவிதிகளை மீறுதல் |
| 36. | பிரிவு 196 | வாகனத்தில் வெளியேற்றுகைச் சான்றிதழொன்றையும் தகுதிச் சான்றிதழொன்றையும் கொண்டுசெல்வதற்குத் தவறுதல் |

.”.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**23.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*